# <u>திண்டுக்கல் மாவட்ட காவல்துறை</u>

# பத்திரிக்கை செய்தி

**செய்தி வெளியீடு எண். 84/DGL/2026, Dated. 10.08.2026**

**அம்பாத்துரை காவல்நிலையத்தில் 20.5 கிலோ கிராம் கஞ்சா, கடத்தலுக்கு பயன்படுத்திய 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல், 5 குற்றவாளிகள் கைது.**

* * * * *

திண்டுக்கல் மாவட்டம், அம்பாத்துரை காவல் நிலையச் சரகம், சிறுநாயக்கன்பட்டி கல்லறை தோட்டம் அருகில் கஞ்சா பதுக்கி வைத்திருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு. S. ஜெயக்குமார், இ.கா.ப.,** அவர்களின் உத்தரவின்பேரில், திண்டுக்கல் ஊரக உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் **திரு. சங்கர்** அவர்களின் மேற்பார்வையில், அம்பாத்துரை பொறுப்பு காவல் ஆய்வாளர் **திருமதி. சத்யா** தலைமையிலான போலீஸார், 09.08.26–ம் தேதி மேற்படி பகுதியில் தீவிர சோதனை நடத்தினர்.

அப்போது போலிஸ் பார்டியை கண்டவுடன் ஓட முயன்ற 5 நபர்களான **1. முகமுது ஆசிக வட்டாத்** (37), த.பெ.முகமது சித்திக், ராஜீவ் நகர், பாலகிருஷ்ணபுரம், திண்டுக்கல், **2. விக்ரம் பஹிரா** (34), த.பெ. சுன்னத் பஹிரா, ஒடிசா, **3. மாதவன் (26),** த.பெ.நடராஜன், வேடப்பட்டி, திண்டுக்கல், **4. வேளாங்கன்னி (24),** த.பெ.கஸ்பர், வேடப்பட்டி, திண்டுக்கல் மற்றும் **5. முகமது அலி ஜின்னா** (31), த.பெ.காஜா மைதீன், மேட்டுப்பட்டி, திண்டுக்கல் ஆகியோரை பிடித்து தணிக்கையில் செய்தததில் அவர்கள் கடத்தலுக்காக வைத்திருந்த **20.5 கிலோ கிராம் கஞ்சா** கைப்பற்றப்பட்டது. மேலும் அவர்கள் கடத்தலுக்கு பயன்படுத்திய 2 **இருச்சக்கர வாகனங்களும்** கைப்பற்றபட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் இருச்சக்கர வாகனங்களுடன் எதிரிகள் **5பேரும் கைது செய்யப்பட்டு**, அம்பாத்துரை காவல் நிலையம் அழைத்து வரப்பட்டு உரிய சட்டப்பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இதில் தொடர்புடைய மற்ற எதிரிகளையும் விரைந்து கைது செய்ய தனிப்படை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், கடந்த **08.07.2026 முதல் 09.08.2026** வரை கஞ்சா கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையில் மொத்தம் 69 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் தொடர்புடைய 84 நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து **மொத்தம் 42 கிலோகிராம் கஞ்சா, 2 கார்கள் மற்றும் 10 இருசக்கர வாகனங்கள்** பறிமுதல் செய்யப்பட்டுள்ளன

**எச்சரிக்கை:-** சமூகத்தில் போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்கும் நோக்கில் திண்டுக்கல் மாவட்ட காவல்துறை தொடர்ந்து தீவிர கண்காணிப்பு மற்றும் சிறப்பு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. போதைப்பொருள் கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனை போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு. S. ஜெயக்குமார், இ.கா.ப.,** அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.





Mohamed Ashik Vattath



Bikrama Behara





Mohamed Ali Jinnah

Madhavan



Sujith @ Velankanni